| | கடற்றொழில் படகுகளின் முன்னோடிபயிற்சி செலவினம் | | 803,092 | |
| | நடைமுறை பயிற்சி செலவினம் | | 378,910 | |
| | **கருத்திட்ட செலவினம்**<br>மனித வளங்களின் ஆற்றலை கட்டியெழுப்புதல் | 2,750,000 | 2,002,712 | 887,393 |
| | மீண்டுவருஞ் செலவினம் - துறைசார் அபிவிருத்தி | | 3,218,437 | 5,260,073 |
| | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 2,578,000 | 1,366,348 | |
| | | 16,652,000 | 20,779,816 | 19,709,580 |
| குறிப்பு 08 | **ஏனைய செலவினம்** | | | |
| | ஊழியர் நலனோம்பல் | 1,200,000 | 1,510,440 | 1,389,311 |
| | பொழுதுபோக்கு | 500,000 | 923,790 | 1,218,787 |
| | ஆட்சி சபை கட்டணங்களை செலுத்தல் | 600,000 | 364,017 | 450,677 |
| | வங்கி கட்டணங்கள் | | 26,615 | 36,534 |
| | ஆலோசனை கட்டணங்கள் | 100,000 | 38,910 | 188,523 |
| | சட்டத்துடனான மற்றும் ஏனைய கொடுப்பனவு | 500,000 | 1,583,905 | 52,583 |
| | உணவு மற்றும் சீருடை | | - | 19,794 |
| | ஏனைய | 34,000 | 1,300 | - |
| | | 2,934,000 | 4,448,977 | 3,356,208 |

குறிப்பு - 09 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள்

| விபரம் | | 2019.01.01 ஆந் திகதியில் மீதி | ஆண்டில் கையகப்படுத்தல் (அகற்றல்) | ஆண்டுக்கான தேய்மானம் | 2019.12.31 ஆந் திகதியில் மீதி |
|---|---|---|---|---|---|
| காணி மற்றும் காணி அபிவிருத்தி | 2105 | 7,939,174.75 | | | 7,939,174.75 |
| கட்டிடங்களை மறுசீரமைத்தல் | 2001/01 | 140,468,025.06 | | (6,824,072.00) | 133,643,953.06 |
| உட்கட்டமைப்பு வசதிகள் - நீர்கொழும்பு இறங்குதுறை | | | | | |
| கொள்வனவு - இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 2103 | 104,541,333.72 | 31,286,673.00 | | 135,828,006.72 |
| கொள்வனவு - கட்டிடங்கள் | 2104 | 183,966,316.94 | 23,832,545.34 | | 207,798,862.28 |
| மறுசீரமைப்பு - படகுகள் மற்றும் கப்பல்கள் | 2005/02 | 11,832,028.02 | | | 11,832,028.02 |
| கடற்றொழில் கருவி உபகரணங்கள் | 2107/02 | 37,273,126.17 | | | 37,273,126.17 |
| தளவாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | 2102 | 102,741,879.49 | 4,400,206.49 | | 107,142,085.98 |
| பெயர் பலகைகள் | 2106/02 | 1,459,114.80 | | | 1,459,114.80 |
| நூலகப் புத்தகங்கள் | 2107/03 | 26,007,045.38 | 184,548.60 | | 26,191,593.98 |
| ஏனைய சொத்துக்கள் | 2106/00 | 8,267,273.72 | 383,300.00 | | 86,50,573.72 |
| மறுசீரமைப்பு - வாகனங்கள் | 2003 | 22,713,970.61 | 1,301,495.62 | | 24,015,466.23 |
| கணினிகள் | 2103/03 | 31,211,625.93 | 2,114,375.40 | | 33,326,001.33 |
| கொள்வனவு - வாகனங்கள் | 2101 | 42,373,703.02 | | | 42,373.703.02 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 2107/04 | 9,728,427.82 | | | 97,28,427.82 |
| மறுசீரமைப்பு அலுவலக உபகரணங்கள் | 2004/00 | 2,951,207.32 | 85,488.00 | | 30,36,695.32 |
| மறுசீரமைப்பு - இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் | 2002 | 2,715,688.56 | 604,808.67 | | 33,20,497.23 |
| கொள்வனவு - பயிற்சி உபகரணங்கள் | 2107 | 64,902,190.12 | 2,979,686.00 | | 67,881,876.12 |
| மறுசீரமைப்பு - பயிற்சி உபகரணங்கள் | 2005/00 | 8,849,670.43 | | | 8,849,670.43 |
| நீர்கொழும்பு - விடுதி கட்டிடம் | 2104/02 | 37,436,137.51 | | | 37,436,137.51 |
| தலைவர் அலுவலக கட்டிடம் | 2104/03 | 20,185,385.00 | | | 20,185,385.00 |
| யாழ்ப்பாணம் கட்டிடம் | 2104/03 | 27,646,398.62 | | | 27,646,398.62 |
| பல்கலைக்கழக சிறப்புடை (லொகு) | | | 1,079,250.00 | | 1.079,250.00 |
| **மொத்தம்** | **(A)** | **895,589,410.56** | **68,252,377.12** | **(6,824,072.00)** | **957,017,715.68** |

குறிப்புகள் - 09.01 வேலை முன்னேற்றம்

| விபரம் | 2019.01.01 ஆந் திகதியில் மீதி | ஆண்டில் கையகப்படுத்தல் (அகற்றல்) | ஆண்டுக்கான தேய்மானம் | 2019.12.31 திகதியில் மீதி |
|---|---|---|---|---|
| சமுத்திர பல்கலைக்கழகம் - பிராந்திய நிலையம் பானந்துறை கட்டிடம். 2104-5 | 54,437,728.55 | 62,583,061.58 | | 117,020,790.13 |
| வேலை முன்னேற்றம் - புஸ்ஸ கட்டிடம் -2104-6 | 12,042,537.60 | 10,437,776.04 | | 22,480,313.64 |
| மட்டக்குளிய - வேலைத்தளம் - 2104-6 | | 6,681,033.40 | | 6,681,033.40 |
| JAICA கட்டிடம் தங்கல்லை 2104-9 | | 1,722,803.24 | | 1,722,803.24 |
| தங்கல்ல மாணவர் விடுதி | | 552,530.96 | | 552,530.96 |
| உப மொத்தம் **(B)** | **66,480,266.15** | **81,977,205.22** | | **148,457,471.37** |
| மொத்தம் **(A) + (B)** | **962,069,676.71** | **150,229,582.34** | **(68,24,072.00** | **1,105,475,187.05** |

குறிப்பு 10 **ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| இடர் கடன் | 12,872,045 | 12,206,667 |
| வைபவ முற்பணம் | 123,250 | 141,804 |
| புத்தக கடன் | 750 | 750 |
| சுனாமி கடன் | 171,464 | 191,464 |
| | 13,167,510 | 12,540,685 |

குறிப்பு 11 **இருப்புகள் 31/12/2019**

| | | |
|---|---|---|
| எழுதுகருவி பொருட்கள் | 1,422,223 | 1,799,717 |
| | 1,422,223 | 1,799,717 |

குறிப்பு 12 **கிடைக்கப்பெற வேண்டிய மீதி**

| | | |
|---|---|---|
| மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் (மின்சாரம்) NARA) | 218,750 | 218,750 |
| மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் (வாகன வாடகை) | 47,000 | 47,000 |
| முற்பணம் | 3,742,168 | 3,742,168 |
| விடுதிக்கான வைப்பு | 1,713,000 | 1,708,500 |
| கிடைக்கப்பெற வேண்டிய கட்டணங்கள் - உயர் கல்வி | 11,797,123 | 15,092,123 |
| சம்பள முற்பணம் | - | 116,500 |
| கிடைக்கப்பெற வேண்டிய விடுதி கட்டணங்கள் - (உயர் கல்வி) | 215,404 | 2,892,804 |
| முற்பணம் செலுத்தல் - கடற்றொழில் அமைச்சு | 930,593 | 930,593 |
| மீள செலுத்தப்பட வேண்டிய - விடுதி கட்டணங்கள் | 110,000 | 110,000 |
| பிரயாணச் செலவின முற்பணம் | | 15,000 |
| எரிபொருள் முற்பணம் | 18,635 | 18,635 |
| மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் (நாரா) | 180,000 | 180,000 |
| நாரா நிறுவனத்திடம் மீள செலுத்தல் | 33,269 | 62,702 |
| மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் | 124,920 | 126,920 |
| விடுதி வைப்புகள் | 400,000 | 400,000 |
| கட்டிடங்களின் வைப்புகள் - கிடைக்கப்பெற வேண்டிய | 5,750,000 | 18,400,000 |
| நலனோம்பல் | | |

| | | | |
|---|---|---|---|
| | | 10,500 | 10,500 |
| | கிடைக்கப்பறெ வேண்டிய அளிப்புகள் - துறைசார் அபிவிருத்தி பிரிவு | 1,148,542 | 12,862,508 |
| | முற்பணம் செலுத்தல் பானந்துரை கட்டிடம் | | 18,841,101 |
| | புஸ்ஸ கட்டிடம் | | 2,053,364 |
| | மட்டக்குளிய வேலைத்தளம் | 1,631,936 | |
| | திருகோணமலை கட்டிடம் | 4,153,670 | |
| | முற்பணம் செலுத்தல் புஸ்ஸ கட்டிடம் Stage 2 | 382,573 | |
| | நிலையான வைப்புகள் - கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானம் | 46,190 | |
| | | **32,654,272** | **7,829,168** |
| குறிப்பு 14 | **கையிருப்பு பணம்** | 14,909,110 | 13,184,971 |
| | வங்கியில் உள்ள பணம் - மக்கள் வங்கி - 9868 | 679,919 | 2,564,179 |
| | வங்கியில் உள்ள பணம் மக்கள் வங்கி -9909 | **15,589,028** | **15,749,150** |
| குறிப்பு 15 | **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | |
| | பல்கலைக்கழக நிருவாக அபிவிருத்தி நிதியம் | 1,192,273 | |
| | துணை வேந்தர் நிதியம் | 596,135 | |
| | பல்கலைக்கழக நிருவாக நிதியம் | 1,788,411 | |
| | | **3,576,819** | |
| குறிப்பு 15.1 | **திரட்டிய நிதியம்** | | |
| | ஆரம்ப மீதி 2019.01.01 | 830,564,132 | 749,318,173 |
| | சேர்த்தல் : அரசாங்கத்தின் அளிப்புகள் | 58,000,000 | 109,000,000 |
| | பொது திறைசேரி ஒதுக்கீடுகள் | | 20,575,000 |
| | அளிப்புகளிலிருந்து வெளிப்படுத்திய கடன் தீர்ப்பை சீராக்குதல் | (66,512,545) | (54,913,291) |
| | இறுதி மீதி 2019.12.31 | **822,051,587** | **823,979,882** |
| | ஏனைய நிறுவனங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியம் | | 6,584,250 |
| | **முழுமொத்த அளிப்புகள்** | 822,051,587 | 830,564,132 |
| | **SSDP-திரட்டிய நிதியம்** | | |
| | ஆரம்ப மீதி 2019.01.01 | 201,422,283 | 166,331,014 |
| | துறைசார் அபிவிருத்தி பிரிவு - திரட்டியநிதியம் | 42,230,962 | 39,698,660 |
| | அளிப்புகளிலிருந்து வெளிப்படுத்திய கடன் தீர்பபு சீராக்குதல் | (4,607,391) | (4,607,391) |
| | இறுதி மீதி 2019.12.31 | **239,045,854** | **201,422,283** |

குறிப்பு 16 **திரட்டிய மிகை / (பற்றக்குறை)**

| | | |
|---|---|---|
| ஆரம்ப மீதி (பற்றாக்குறை) 2019/01/01 | (445,391,295) | (435,126,654) |
| சேர்த்தல் (மிகை /பற்றாக்குறை) ஆண்டில் | (51,749,516) | (5,016,544) |
| முன்னரான ஆண்டில் சீராக்கதல் | (17,275,737) | (5,248,097) |
| இறுதி மீதி 2019.12.31 | **(514,416,548)** | **(445,391,295)** |

குறிப்பு 17 **அட்டுறு செலவினம்**

| | | |
|---|---|---|
| **அட்டுறு செலவினம்** | 83,644,548 | 55,834,256 |
| | **83,644,548** | **55,834,256** |

குறிப்புகள் 18 **மீள செலுத்தப்பட வேண்டிய செலவினம்**

| | | |
|---|---|---|
| பிடிபணம் | 12,281,020 | 9,246,126 |
| மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் (கேள்வி வைப்புகள்) | 107,200 | 461,826 |
| மீள செலுத்தப்பட வேண்டிய நூலக வைப்புகள் | 1,641,000 | 964,000 |
| மீள செலுத்தப்பட வேண்டிய - ஆய்வுகூட வைப்புகள் | 792,000 | 452,000 |
| முத்திரை கட்டணங்கள் | | 21,250 |
| உழைக்கும் போது செலுத்துதல் | 24,365 | 3,090 |
| கிடைக்கப்பெற வேண்டிய | 3,700 | 3,700 |
| மீள செலுத்தப்பட வேண்டிய விடுதி வைப்புகள் | 652,526 | 107,200 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 1,353,213 | 1,353,213 |
| கடன் கொடுநருக்கு வழங்குதல் | 493,492 | 388,434 |
| ஏனைய | 1,400 | 1,400 |
| பண்டிகை கடன் மக்கள் வங்கி | 300,468 | |
| முற்பணம் செலுத்தல் பானந்துரை கட்டிடம். | 1,343,450 | |
| | **18,993,833** | **13,002,239** |

# 11. கணக்காய்வாளர் அதிபதி

துணைவேந்தர்
இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம்

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

சான்றுப்படுத்திய நிதிக் கூற்றுகள் மற்றும் மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதிகள் 1. உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கல் அமைச்சு,
2. செயலாளர்- நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

டப்.பீ.சீ.விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் அதிபதி.

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான தெளிவுபடுத்தல்கள்

**இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று,தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக சட்டத்தின் 51 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154 (1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது.

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து,இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக அதன் நிதி செயலாற்றினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ). இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு அமைவாக நிறுவனத்தால் முன்னரான காலப் பகுதிகளில் நிகழ்ந்துள்ள பிழைகளை செவ்வையாக்குகையில், கடந்த காலத்திற்கு சீராக்கப்பட்டு அது தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டுமாயினும்,ரூபா.18,294,286 ஆன பற்று தொகையும்,ரூபா.1,081.250 ஆனவரவு தொகையும் தொடர்பில் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 47 பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றின் நியாயமான பெறுமதியில் கவனிக்கத்தக்க அளவில் வேறுபாடுகள் உள்ளவிடத்து, ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கொருமுறை அல்லது ஐந்தாண்டுகளுக்கொருமுறை மீள்கணிப்பீடு செய்தல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய பெறுமதி ரூபா.500,305,508 ஆன பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோன்று குறித்த நியமத்தின் 21 ஆவது பிரிவிற்கு முரணாக ரூபா.1,301,495 ஆன மீண்டுவரும் இயல்பிலான வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பேணல் செலவினங்களை மூலதனமயப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவினம்ரூபா.53,925,596 ஆன 05 சொத்து உருப்படிகள் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் குறித்த சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 03 இன் படி மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) திருகோணமலை கல்லூரியில் கட்டிடங்களை மேம்படுத்தல் பொருட்டு செலவிடப்பட்டிருந்த ரூபா.4,153,670 பெறுமதியான தொகையினை, கட்டிடங்களின் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முற்பணக் கணக்கில் வரவு வைத்தன் காணரமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் குறித்த தொகையில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறைவாகவும் முற்பணக் கணக்கின் மீதி அதிகமாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) அட்டுறு கணக்குகளாக கணக்கு வைக்கப்படாத முன்னரான ஆண்டுகளுக்கு உரியதான இரண்டு நிருமாணிப்புகளின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா.3,764,056 தொகை சீராக்கும் போது, அட்டுறு செலவினக் கணக்கினை வரவு வைப்பதன் மூலம் ஏற்பட்ட பிழையினை செவ்வயாக்கும்போது சம்பந்தப்பட்ட சொத்துக்களின் கணக்கினை வரவு வைப்பதற்குப் பதிலாக பற்றாக்குறை மற்றும் மிகை கணக்கினை வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 04 கணக்கு விடயங்களுக்கு ஏற்புடையதாக மொத்த பெறுமதிரூபா.49,989,268 ஆன நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளுக்கான விபரமான அட்டவணைகளை கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில்

மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கானஅடிப்படைவழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு

காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படா-திருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்ககழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தால் பேணப்பட்டிருந்தது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கையில், முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்-மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே

நிறுவனத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நிறுவனத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் அதிகாரசபை இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

| சட்டங்கள்விதிகள்.ஃ.ஏற்பாடுகளின் தொடர் | விபரம் |
|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழகச் சட்டம்<br>(ள) 10(1) மற்றும் 10(3) பிரிவுகள் | பல்கலைக்கழகம் பொருட்டு துணைவேந்தர் மற்றும் “உள்ளடக்குதல் அங்கீகரிப்பு மற்றும் தரச் சான்றிதழ் சபைக்காக” பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமாயினும் பல்கலைக்கழகத்தின் ஆரம்பம் தொடக்கம் குறித்த பதவிகளின் பொருட்டு அலுவலர்களை நியமனம் செய்யப்படவில்லை. |
| (ளை) 45 ஆவது பிரிவு<br>ஏதேனும் நிதி ஆண்டுக்கு ஏற்புடையதாக | ஏதேனும் நிதி ஆண்டுக்கு ஏற்புடையதாக வருடாந்த வரவு செலவு மதிப்பீடு மற்றும் வருடாந்த வரவு செலவின நிதிக் கூற்றுகள் (நிதி ஒதுக்கீடு) தயாரிக்கப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக அவ்வாறான வரவு செலவின நிதிக்கூற்றுகளை தயாரிக்கப்படவில்லை. பொது திறைசேரியின் ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்-வதற்கு ஏற்புடையதாக செலவின மதிப்பீடுகளை மட்டும் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நிதிக் கூற்றுகளின் குறிப்புகளில் வரவு செலவு பெறுமதிகளாக குறித்த வரவு செலவின மதிப்பீடுகள் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 206 மற்றும் 565 (2) | வைப்புகளை மீள செலுத்துகையில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளை பின்பற்றாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையால் ஏதேனும் ஒரு குறித்த திகதியில் ஒரு நபருக்கு.ஃ.ஒரு நிறுவனத்தறிகு மேலும் சீராக்கப்பட வேண்டிய வைப்பு பெறுமதியினை அடையாளம் காண முடியவில்லை. அவ்வாறே வைப்பு ஆவணங்களையும் பேணப்படவில்லை. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

-பல்கலைக்கழகத்தின் நிருவாக, கல்விசார் பணியாற்றொகுதி,வகுப்பறைகள் மற்றும் நூலகங்களின் பொருட்டு பயன்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் தொடக்கம் மாதாந்த வாடகை ரூபா.மில்லியன் 2.3 படி, சதுர அடி 16,800 அளவிலான புதிய கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மாதாந்த வாடகைக்கு மேலதிகமாக குறித்த கட்டிடத்தின் உட்புற வடிவமைப்புகளின் பொருட்டு ரூபா.மில்லியன் 22 செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் இதனூடாக பல்கலைக்கழகத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் அல்லது நடாத்தப்படுகின்ற பட்டப்படிப்பு கற்கைநெறிகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அடையாளம் காண முடியவில்லை. அதேபோன்று பல்கலைக்கழகத்தால் பயன்படுத்திய கட்டிடத் தொகுதி சதுர அடி 11778 அளவு தற்போது பயனற்று அல்லது குறைப்பபயன்பாட்டுடன் காணப்படுகிறது.

**ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

(ை) 2015 ஆம் ஆண்டில் 04 பட்டப்படிப்புகளின் கீழ் 87 மாணவர்கள் பதிவாகியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 156 வரை அதிகரித்திருப்பினும், அதன் பின்னர் போதியளவு வளர்ச்சி ஏற்படவில்லை என்பதுடன், 2019 ஆம் ஆண்டில் 05 கற்கைநெறிகளின் கீழ் பதிவாகிய மாணவர்களின் எண்ணிக்கை 207 ஆகும்.

(ை) 2015 ஆம் ஆண்டில் தொழில்சார் கற்கைநெறிகள் (ஏஜு) 12 இன் கீழ் கற்கைநெறிகளை கற்கின்ற 466 மாணவர்களில் போதியளவு வளர்ச்சி ஏற்படவில்லை என்பதுடன், மீளாய்விற்கான ஆண்டில் அவ்வாறான 14 கற்கைநெறிகளின் கீழ் 604 மாணவர்கள் பதிவாகியுள்ளனர்.

அதன் படி பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் தொழில்சார் கற்கைநெறிகளின் பொருட்டு அதிகமான எண்ணக்கையினர் பதிவு செய்வதன் மீது முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படவில்லை.

(ஆ) கணக்காய்வில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனையின் படி மட்டக்குளி பீடத்தின் 674 மணித்தியாலங்களைக் கொண்டு நடாத்தப்பட வேண்டிய பட்டப்படிப்பு கற்கைநெறிகளின் கீழ் 20 பாடங்களுக்கு ஏற்புடையதாக 03 போதனை அறிக்கை

புத்தகங்களை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், சமர்ப்பிக்கப்பட்ட போதனை அறிக்கை புத்தகங்களிலும் 08 பாடங்களின் கீழ் நடாத்தப்பட வேண்டிய 435 மணித்தியாலங்களுக்கான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. அதேபோன்று குறிப்பு வைக்கப்பட்டிருந்த போதனை அறிக்கை புத்தகங்களின் படி 38 பாடங்களின் கீழ் நடாத்தப்பட வேண்டிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1854 என்று குறிப்பு வைக்கப்பட்டிருப்பினும், 1218 மணித்தியாலங்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன. அதன்படி கற்கைநெறிகள் நடாத்துவதை பதிவு செய்வதற்காக பல்கலைக்-கழகத்தால்அறிமுகப்படுத்தியிருந்த போதனை அறிக்கை புத்தகங்கள் (டுநஉவரசந சுநஉழசன டீழழம) தொடர்பாக உரிய மேற்பார்வை இல்லாமை, தகவல் பூர்த்தியாகாமை போன்ற குறைப்பாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையில் மட்டக்குளி பீடத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறிகளின் கீழ் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் பெறுபேறுகள் வழங்கிய 36 பாடங்களுக்கு ஏற்படையதாக 1306 மாணவர்கள் முதலாவது முறையாக பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெற்றிருப்பினும், 924 வினாத்தாள்களுக்கு மட்டும் தோற்றியிருந்தனர். அதன்படி பல்கலைக்கழகத்திற்கு ஏற்புடையதாக ஒவ்வொரு கற்கைநெறிகளின் கீழ் பரீட்சைகளில் தோற்றுவதற்கு தகைமை பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அதன்கீழ் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை அடையாளம் காணுவதற்கு முறைமையொன்று இல்லாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பட்டப்படிப்பு கற்கைநெறிகளின் கீழ் இரண்டு வாரங்களுக்குள் விடைத்தாள்களை பரீட்சித்த பின்னர், ஒரு வார காலத்தின் மதிப்பீடுகளின் பின்னர் பரீட்சை பெறுபேறுகள் வழங்கும் முறைமை பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. மட்டக்குளி பீடத்திற்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் மே மற்றும் யூன் மாதங்களில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பில் மேற்கொண்ட மாதிரிகணக்காய்வு பரிசோதனை பிரகாரம், 12 குழுக்களில் 85 பாடங்களின் கீழ் 3036 மாணவர்கள் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு தகைமை பெற்றிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் 09 குழுக்களில் 36 பாடங்களுக்கு ஏற்புடையதாக 924 விடைத்தாள்களுக்கு மட்டும் பரீட்சை பெறுபேறுகள் வழங்கப்பட்டிருந்தன். எஞ்சிய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் தோற்றியதாக உறுதிபடுத்திக் கொள்வதற்கு ஒழுங்கு முறையிலான முறைமை பல்கலைக்கழகம் பின்பற்றியிருக்கவில்லை.

(உ) கற்கைநெறிகளின் உள்ளடக்கம், ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பணியாற்றொகுதியினரின் நடவடிக்கைகள் என்பவற்றுக்காக அளவுகோள்களை தயாரிப்பதற்கு பல்கலைக்கழக சட்டத்தில் 23 ஆவது பிரிவு பிரகாரம் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள உட்சேர்ப்புகள், அங்கீகரிப்பு மற்றும் தரச் சான்றுப்படுத்தும் சபை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை 03 அமர்வுகளில் மட்டும் கூடியிருந்ததுடன், குறித்த அமர்வுகளின் போது

பல்கலைக்கழக பணியாற்றொகுதியினரின் உள்ளீர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மட்டும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் 5.1 (25) பிரிவு பிரகாரம் தாபிக்கப்பட வேண்டிய ளுநய வுசயைைபெ ஏநளளநட ஆயபைெநயெஉந அலகு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை தாபிக்கப்படவில்லை. பயன்படுத்த முடியுமான 1994 தொடக்கம் 2015 வரையிலான காலப் பகுதியில் இந்த அலகின் பொருட்டு கிடைக்கப்பெற்றிருந்த ஐடுெழயசனஇ ழுரவடிழயசன மற்றும் அதிவேக படகு ஆகிய 13 படகுகளின் பொருட்டு பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயனற்றும் உபயோகப்படுத்தாதும் இருந்தன.

(எ) மட்டக்குளிய பெரேரா விடுதி 2015 ஆம் ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருப்பினும், அதற்காக பல்கலைக்கழகத்தால் வழங்கியிருந்த ரூபா.840,000 முற்பணத் தொகை மீண்டும் பெற்றுக்கொள்ளாது கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளின் கீழ் நீண்டகாலமாக இருந்து வரும் சீராக்கப்படாத மொத்த பெறுமதி ரூபா.13,784,801 ஆன 09 மீதிகள் காணப்பட்டன.

(ஐ) அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி 335 ஆயினும், 2019 ஆம் ஆண்டு இறுதியில் சேவையில் ஈடுபட்டிருந்த பணியாற்றொகுதி 202 பேர் ஆகும். அதன்படி கல்விசார் பணியாற்றொகுதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 60 ம், கல்விசாரா பணியாற்றொகுதியின் வெற்றிடங்கள் 78 ம் என்ற வகையில் 04 பதவி பெயர்களின் கீழ் 15 மிகை காணப்பட்டன.

(ஒ) பட்டப்படிப்பு கற்கைநெறிகள் நடாத்தப்படுகின்ற உயர் கல்விப் பிரிவின் விரிவுரையாளர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி 31 பேர் ஆவதுடன், 2019 ஆம் ஆண்டு இறுதியில் உண்மையான பணியாற்றொகுதி 25 பேர் ஆகும். அதற்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் 02 விரிவுரையாளர்களதும07 வெளியக விரிவரையாளர்களதும் சேவை பெற்றுக்கொண்டு ஒழுங்குமுறையில் ரூபா.1,200,000 ஐ மற்றும் 5,468,025 படி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) தொழில்சார்கற்கைநெறிகள் நடாத்தப்படும் தொழில்சார் கற்கை பிரிவின் ஆலோசகர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி 74 பேர் ஆவதுடன், 2019 ஆண்டு இறுதியில் உண்மையான பணியாற்றொகுதி 18 பேர் ஆகும். இதற்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் 25 ஆலோசகர்களதும் 79 வெளியக ஆலோசகர்களதும் சேவை பெற்றுக்கொண்டு ஒழுங்கு முறையில் ரூபா.9.976,285 மற்றும் ரூபா.5,735,245 ஐ கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியூ.பீ.சீ.விக்கரமரத்ன
கணக்காய்வளார் அதிபதி

## <u>12. கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட</u>

**கணக்காய்வாளர் அதிபதி,**
**தேசிய கணக்காய்வு அலுவலகம்,**
**இலக்கம் 306.˙.72,**
**பொல்துவ வீதி,**
**பத்தரமுல்லை.**

**<u>இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்காக தயாரிக்கப்பட்ட பதில் அறிக்கை</u>**

தொடர்: இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

01. மேற்படி விடயங்களுக்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக தங்களால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட விபரமான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்காக தயாரிக்கப்பட்ட பதில் அறிக்கை

பேராசிரியர் என்.பீ.ரத்நாயக்க,
துணைவேந்தர்,
இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம்

பிரதிகள்:-

01. கணக்காய்வு மேற்பார்வையாளர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்,
அரசாங்கத்தின் கணக்காய்வு பிரிவு கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்றுவிப்பு திணைக்களம்,
கொழும்பு 10

**தெளிவுபடுத்தல்**

1.2 (அ)கணக்காய்விற்கான விடயத்துடன் இணங்குவதுடன், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட செவ்வைப்படுத்தல்களை, 2020.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டில் சீராக்கல்களை மேற்கொண்டு, நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றோம்.

1.2 (ஆ)கணக்காய்விற்கான விடயத்துடன் இணங்குவதுடன்,2020.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டில், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று நியமத்தின் 21 ஆவது பிரிவு பிரகாரம் மூலதனமயப்படுத்தியிருந்த மீண்டுவரும் செலவினங்களையும், மீள செவ்வையாக கணக்குகளில் சீராக்கப்பட்டு 2020.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக கணக்கு அறிக்கைகளை, கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.

1.2 (இ)செலவினம் ரூபா.53,925,596 ஆன பெறுமதிகளைக் கொண்ட உருப்படிகளின் பொருட்டு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு இலங்கை 2020.12.31 ஆந் திகதியில் இறுதி ஆண்டு கணக்கில் திருத்தம் செய்து சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொண்டேன்.

1.2 (ஈ) 2020.12.31ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக இலங்கை சமுத்திர பல்கலைக்ககைத்தின் இறுதி கணக்குகளை தயாரிக்கையில் இந்த வழுக்களை செவ்வைப்படுத்தி சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்கில், முற்பணக் கணக்கின் மீதியை இற்றைப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

1.2(உ) 2020.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக இலங்கை சமுத்திர பல்கலைக்ககைத்தின் இறுதி கணக்குகளை தயாரிக்கையில் இந்த வழுக்களை செவ்வைப்படுத்தி சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்கில், பற்றாக்குறை மற்றும் மிகை கணக்கில் மீதியை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.2(ஊ) நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய மீதிகளின் பொருட்டு விபரமான அட்டவணைகளை தற்போது தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகின்றேன். எதிர்வரும் காலத்தில் குறித்த மீதிகளை மிகவும் முறையான வகையில் அடையாளம் காணுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 2.ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை பந்தி | |
| | |
| (அ) 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக சட்டம் | 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் 10 (1) பிரிவு பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்-ளப்பட்டு வருகிறது. |
| 10(1)மற்றும் 10 (3) பிரிவுகள் | தற்போது பதில் கடமையாற்றும் அங்கீகரிப்பு மற்றும் தரச் சான்றுப்படுத்தும் பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்து அங்கீகரிப்பை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ை) 45 ஆவது பிரிவு | - 2020 ஆம் ஆண்டு பொருட்டு பொது திறைசேரி திணைக்களத்தால் மீண்டுவரும் மற்றும் மூலதன நிதியம் உரியவாறு ஒதுக்கீடு செய்து அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், 45 ஆவது பிரிவு பிரகாரம் வருடாந்த வரவு செலவு மதிப்பீடு மற்றும் வரவு செலவிடப்பட்ட நிதிக் கூற்றுகளை தயாரித்து நிருவாக சபையிடம் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை வகுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையின் 206மற்றும் 565 (2) | - வைப்பு ஆவணங்களை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்-பட்டதுடன், குறித்த திகதியில் ஒரு நபருக்கு சீராக்குவதற்குள்ள பெறுமதியை அடை-யாளம் காண்பதற்கு தேவையான நடவடி-க்கைகளை வகுத்து 2020.12.31 இறுதி ஆண்டுக்காக கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

**3.ஏனைய அவதானிக்கப்பட்ட விடயங்கள்**

(அ) (ை) தற்போதுள்ள போதனா மண்டபங்கள் மற்றும் வகுப்பு அறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆகக் கூடிய மட்டத்தில் உட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் ஆறு கற்கை நெறிகள் வரை விருத்தி செய்யப்பட்டு, மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு தேவையான ஆய்வுகூடங்கள் மற்றும் வேலைத்தளங்கள் வெளியக தரப்புகளிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதால், எதிர்வரும் காலத்தில் குறித்த வசதிகளை அதிகரிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்புகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் கொரிய நாட்டு அனுசரணையில் கிடைக்கப் பெறவுள்ள “முழுஜஊயு”

கருத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகம் மேம்படுத்தப்பட்டு தேவையான வசதிகளை தாபித்து மாணவர்களை 1600 வரை ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது.

(ை) மீளாய்விற்கான ஆண்டில் தொடர்புடைய துறையில் நிரந்தர ஆலோசகர்கள் போதியளவில் இல்லாத படியாலும், குறித்த நியமனங்களை பெற்றுக்கொள்வதற்கு குறுகிய காலப் பகுதியில் ஆட்சி சபையின் உறுப்பினர்கள் அவ்வப்போது மாற்றமடைந்ததாலும் வெளியக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புகளை செய்வதற்கு தேவையான அனுமதி உரிய காலப் பகுதிக்குள் பெற்றுக்கொள்வதற்கு போதியளவு காலம் இல்லாத படியாலும், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இயலாது போனமையால் திட்டமிட்டவாறு ஆட்சேர்ப்புகளை செய்வதற்கு இயலவில்லை.

(ஆ) பெரும்பாலான போதனை நடவடிக்கைகள் வெளியக விரிவுரையாளர்களை கொண்டு நடாத்தப்படுகின்றன. அவர்களின் போதனை அறிக்கை புத்தகங்களை நிறைவு செய்வதற்கு அவர்களிடம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு புதிய எளிய முறை எதிர் காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோன்று பீடாதிபதிகள் மற்றும் கல்விப் பிரிவின் தலைவர்கள் ஊடாக இதற்கு ஏற்றுக்கொள்ள முடியுமான முறைமை தயாரிக்கப்படும்.

(இ) இந்தப் பிரச்சினை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தில் பரீட்சை நடாத்துவதற்கும் அதன் பொருட்டு தொடர்புபடுகின்ற மாணவர்களுக்கு துணை விதிச் சட்டமொன்றை (டீல டுயறள) நிறைவேற்றிக்கொண்டு 2020 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதேபோன்று பரீட்சையில் தோற்றுகின்ற பிள்ளைகளின் ஒப்பத்துடன் கூடிய ஆவணமொன்றை பரீட்சை பிரிவில் பேணப்படுகிறது.

(ஈ) பெரும்பாலான பரீட்சை வினாப் பத்திரங்கள் வெளியக விரிவுரையாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. அவர்களிடமிருந்து பெறுபேறுகளை பெற்றுக்கொள்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனை தவிர்த்துக் கொள்வதற்காக நிரந்தரமான விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் எழுத்திலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(உ) 2017 இல்முதல் முறையாக உட்சேர்ப்பதன் அங்கீகரிப்பு மற்றும் தரச் சான்று சபை நடாத்தப்பட்டது. அது ஒவ்வொரு ஆண்டும் அதன் பின்னர் நடாத்தப்பட்டது. அதன்போது ஆரம்ப ஆண்டிடுகளில் பல்கலைக்கழகம் எதிர்நோக்கிய பிரச்சினையான உள்ளீர்ப்பு தொடர்பான பிரச்சினைக்கு தீர்ப்பு காணப்படாவிடின்ஒரு பல்கலைக்கழகமாக முன்கொண்டு செல்வதற்கு இயலாத நிலைமை ஏற்பட்டிருந்த படியால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் இறுதியாக நடாத்தப்பட்ட அங்கீகரிப்பு மற்றும் தரச் சான்றுப்படுத்தும் சபையில் 06 உயர் கல்வி கற்கை நெறிகளை நடாத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல் போன்ற உயர் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள் வழங்கப்பட்டன.

(ஊ) சமுத்திர பல்கலைக்கழகச் சட்டம் மூலம் படகுகளை பராமரிக்கும் அலகினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் படி குறிப்பிடப்படினும், அதற்கு தேவையான பயிற்சி பணியாற்றொகுதி இல்லாத படியால் அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சில படகுகள் செயற்பாட்டு

நிலைமையில் இருக்காத படியால் அதாவது, அவற்றை பழுதுபார்க்கும் மட்டத்தின் படகுகளாக காணப்பட்டமையால், 2020 ஆம் ஆண்டில் பழுதுபார்த்து பயிற்சி நடவடிக்கைகளுக்கு தேவையான வகையில் தயார் நிலையில் உள்ளதுடன், பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ள படகுகளை பழுதுபார்க்காது அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று தற்காலிக தீர்வாக அந்த அலகினை தாபித்து பதில் கடமையாற்றும் மேற்பார்வையாளர் ஒருவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

(எ) சம்பந்தப்பட்ட வதிவிட வைப்புத் தொகை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தில் விடயங்களை உசாவியுள்ளதுடன், அது தொடர்பான எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஏ) குறித்த மீதிகளை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரைகளுடன் அப்போதைய ஆட்சி சபையின் அனுமதியுடன் நேர்வரிசை அமைச்சு மூலம் பொது திறைசேரி திணைக்களத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படினும், குறித்த மீதிகளை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான அனுமதி கிடைக்கப்பெறவில்லை.

அதேபோன்று, மீண்டுமொரு முறை குறித்த கடன் மீதியை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டில் அப்போதைய, கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களை மீள் பதிவு செய்தல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி கௌரவ (பதில் கடமையாற்றும்) அமைச்சர் அவர்களால் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டதுடன்,குறித்த விஞ்ஞாபனம் பிரகாரம் அமைச்சரவை தீர்மானத்தை கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள், நீண்டகாலம் இடம்பெயர்ந்த நபர்களை மீள் பதிவு செய்தல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளரால் (நிருவாகம்) துணைவேந்தர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன்,குறித்த தீர்மானத்துடன் மீண்டுமொரு முறை நீண்ட காலமாக தீர்க்கப்படாத மொத்த பெறுமதி ரூபா. 13இ784இ801∴-மீதியென கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையில் உள்ளடக்கியுள்ள குறித்த மீதியை சீராக்குவதற்காக 2020 ஆம் ஆண்டில் முதலாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழவிடம் சமர்ப்பிப்பதற்கு பத்திரிக்கை தயாரித்துள்ளதுடன், குறித்த குழுவின் பரிந்துரைக்கமைவாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஐ)உயர் கல்வி பிரிவு நிறுவனத்தின் பணியாற்றொகுதி 33 ஆவதுடன், அதில் 28 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். அதன்போது வெற்றிடங்களின் எண்ணிக்கை 03 ஆகும். தொழில்சார் பயிற்சி பிரிவின் ஊழியர்களின் எண்ணிக்கை 09 ஆகும். அதில் 11 பேர் உள்ளீர்க்கப்படுள்ளனர். வெற்றிடங்களை நிரப்புகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கியுள்ள சம்பள குறியீடுகளில் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை உள்ளதால் ஆட்சேர்ப்புச் செய்வறத்கு சிரமமாகியுள்ளது.

(ஒ) பல்கலைக்கழகத்தின் 05 கற்கைநெறிகளில் 65 பாடங்கள் உள்ளடங்கும் வகையில் ஆகக் குறைந்ததாக 13 விரிவுரையாளர்களை ஒவ்வொரு திணைக்களத்திடமும் வழங்குதல் வேண்டும். ஆயினும், தற்போதுள்ள விரிவுரையாளர்களைக் கொண்டு உரியவாறு கற்கைநெறிகளை

பராமரிப்பதற்கு போதுமற்றதால், பல்கலைக்கழகத்தின் வெளியக விரிவுரையாளர்களது ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொதுவாக ஒரு பட்டிப்படிப்பு கற்கைநெறியினை நடாத்தி செல்வதற்கும், உயர் கல்வி பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் திணைக்களத்திற்கு 13 விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர். அதன்படி பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளை மிக வினைத்திறமையாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதற்கு தற்காலம் 65 விரிவுரையாளர்களின் சேவை தேவைபடுமாயினும், ஏறத்தாழ 37 பேர்களதுசேவையில் பற்றாக்குறை உள்ளது.தற்போது உயர் கல்விப் பிரிவுக்காக 20 புதிய விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் பொருட்டு தேவையான கற்கை பணியாற்தொகுதியினரை இயன்ற விரைவில் அங்கிகரித்துக்கொண்டு வெற்றிடங்களை நிரப்பியதன் பின்னர் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும்.

(ஔ) பிராந்திய நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுகின்ற 23 தொழில்சார் கற்கைநெறிகளை பராமரித்துச் செல்வதுடன், குறித்த நிலையங்களில் அதிக அளவிலான நிரந்தர ஆலோசகர் இல்லாத படியால் கற்கைநெறிகளை உரியவாறு பராமரிப்பதற்கு தற்போது வெளியக மற்றும் ஒப்பந்த அடிப்படையின் மீது விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. தொழில்சார் கற்கை பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை 69 ஆகும். அதில் தற்போது 18 பேர் சேவையில் ஈடுபட்டிருப்பினும் ஏனைய ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உள்ளீர்ப்பு பிரச்சினைகள் மற்றும் தாபன கட்டமைப்பு தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வர வேண்டியுள்ளதால், அது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை 2020 ஆம் ஆண்டில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பேராசிரியர் நலின் ரத்நாயக்க
துணைவேந்தர்இ
இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம்.

නිපුණතා සංවර්ධන, රැකී රක්ෂා හා කම්කරු සබඳතා අමාත්‍යාංශය
திறன்கள் அபிவிருத்தி ,வேலை வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு
Ministry of Skills Development, Employment and Labour Relations